

## தினத்தந்தி (13.12.2023)



### புகழூர் காகித ஆலை சார்பில்

# தென்னை விவசாயிகளுக்கு விளக்குப்பொறி வழங்கல்

நொய்யல், டிச.13-

புகழூர் நகராட்சிக்கு உட்பட்ட கந்தசாமிபாளையம், சொக்கன்காடு பகுதிகளில் கடந்த சில வாரத்திற்கு முன்பு சுமார் 60-க்கும் மேற்பட்ட ஏக்கரில் உள்ள தென்னை மரத்தில் கருந்தலை புழுக்களின் தாக்கம் அதிக அளவு காணப்பட்டது. இதனையடுத்து அதிகாரிகள் அதை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதையடுத்து தென்னை மரத்தில் கருந்தலை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விளக்குப்பொறி (லைட் டிராப்) வழங்க புகழூர் காகித ஆலை சார்பில் முடிவு செய்யப்பட்டு அதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் காகித ஆலை செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம்) ஜெயக்குமார் ஆகியோர் ஏக்கருக்கு தலா 2 விளக்குப்பொறிகள் வீதம் 60 ஏக்கருக்கு ரூ.2 லட்சத்து 4 ஆயிரம் மதிப்பிலான 120 விளக்குப்பொறிகளை விவசாயிகளுக்கு வழங்கினர். அப்போது புகழூர் நகர் மன்ற தலைவர் சேகர் என்கிற குணசேகரன், துணைத்தலைவர் பிரதாபன், நகர்மன்ற உறுப்பினர் நவநீத கிருஷ்ணன், காகித ஆலை அதிகாரிகள் உடனிருந்தனர்.

தினமணி (13.12.2023)

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.2.4 லட்சத்தில் விவசாயிகளுக்கு உபகரணங்கள்

கரூர், டிச.12: டிஎன்பிஎல் ஆலை சார்பில் விவசாயிகளுக்கு திங்கள்கிழமை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கரூர் மாவட்டம், புகழூர் நகராட்சிக்குட்பட்ட கந்தசாமி பாளையம் , சொக்கன்காடு பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பு சுமார் 60-க்கும் மேற்பட்ட ஏக்கரில் உள்ள தென்னை மரத்தில் கருந்தலை புழுக்களின் தாக்கம் அதிகளவு காணப்பட்டது. இதையடுத்து, கரூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சண்முகசுந்தரம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு இயக்குநர் சாந்தி, பூச்சியியல் துறைதலைவர் முருகன், புழுதேரி வேளாண்மை அறிவியல் மைய தலைவர் திரவியம் உள்ளிட்ட குழுவினர் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை ஆய்வு செய்து விளக்குப்பொறி வைக்க அறிவுறுத்தினர்.



டிஎன்பிஎல் ஆலை வளாகத்தில் விவசாயிகளுக்கு விளக்குப்பொறியை திங்கள்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம்) ஜெயக்குமார் உள்ளிட்டோர். உடன் புகழூர் நகராட்சித்தலைவர் குணசேகரன் உள்ளிட்டோர்.

இதையடுத்து, விவசாயிகள் புகழூர் நகர்மன்றத் தலைவர் குணசேகரனிடம் விளக்குப்பொறி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனு அளித்தனர். இதையடுத்து நகர்மன்றத்தலைவர், டிஎன்பிஎல் ஆலையிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விளக்குப்பொறி (லைட்டிராப்) வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை ஆலைவளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு காகித ஆலை செயல் இயக்குநர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம்) ஜெயக்குமார் ஆகியோர் ஏக்கருக்கு தலா 2 விளக்குப்பொறி வீதம் 60 ஏக்கருக்கு ரூ.2.4 லட்சம் மதிப்பிலான 120 விளக்குப் பொறிகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் புகழூர் நகர் மன்ற தலைவர் சேகர் என்கிற குணசேகரன், துணைத் தலைவர் பிரதாபன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.